

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாடு திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (8.9.2025) சென்னை விமான நிலையத்திலிருந்து இல்லம் செல்லும் வழிநெடுகிலும் பொதுமக்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (08.09.2025) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, விருகம்பாக்கம் கால்வாயில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலிவேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே. மோகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் கூ.பி. ஜெயின் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
## செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வார்டு, கிளை, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 10.09.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில், கலைஞர் விளையாட்டுத் திடல், மறைமலைநகரில் நடைபெறவுள்ளது. செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை–18.
நாள் : 09-09-2025

கலைஞர் 100 1924 - 2023








கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெறவிருக்கும், தி.மு.க. முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், குளித்தலை தொகுதி, ஐயர்மலை சுபம் மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். குளித்தலை எம்.எல்.ஏ. இரா.மாணிக்கம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் திரளாக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# அந்த 7 நாட்கள்!



அந்த 7 நாட்கள்!
வாரத்தில் வரும் நாட்கள்அல்ல;
வரலாறு படைத்த நாட்கள்!
“திரைகடலோடியும் திரவியம் தேடு”
என்று அவ்வை சொன்னது,
தனிமனிதனுக்கு மட்டுமல்ல;
ஆட்சியில் இருப்பவர்களுக்கும் தான்
என்று முடிவெடுத்து,
ஜெர்மன் நாட்டிற்கும், இங்கிலாந்து நாட்டிற்கும்,
திரவியம் திரட்டச் சென்றுவந்தார்
நம் முதல்வர் தளபதியார்!

ஜெர்மன்!
ஒருகாலத்தில்உலகையே
ஒருகுடையின்கீழ் கொண்டுவரவேண்டும்
என்ற பேராசையால்
உலகையே கிடுகிடுக்கவைத்த
ஹிட்லர் வாழ்ந்த பூமி ஜெர்மன்!
இரண்டாவது உலகப்போருக்குப்பின்
நாடு நிலைகுலைந்துபோனது!
முடங்கிப் போன தொழில்கள்;
வறுமையால் வதங்கிப் போன மக்கள்;
நாடே இரண்டானது!
கிழக்கு மேற்கு என்றிருந்த நாடு இன்று
தொழில்துறை; கல்வித்துறை;
உணவுத்துறை போன்றவற்றில்
உலகநாடுகளோடு போட்டிபோட்டு நிற்கிறது!

இலண்டன்!
இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டன்!
“மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது”
என்ற பழமொழி
இங்கிலாந்து நாட்டிற்குத் தான் பொருந்தும்!
யுத்தத்திலிருந்து உலகைக்
காப்பாற்றியது லண்டன்!
எல்லாவற்றிற்கும் மேலாக,
நம்மை 250 ஆண்டுகளுக்கும்
மேலாக ஆண்ட நாடு!
எனினும், ஜனநாயகம்
பழுதுபடாமல் இருக்கிறது!
அதனால் அந்த நாட்டு அமைச்சரோடு
நம் தலைவர் தளபதி சரியாசனத்தில்
அமர்ந்து உரையாடியிருக்கிறார்!

ஜெர்மன், இங்கிலாந்து
இந்த இரு பெரும் நாடுகளில்
நம் முதல்வர் தளபதியார் திரட்டிவந்த
தொழில்துறைமுதலீடுகள் 15,516கோடி!
இந்த முதலீடுகள் தொழிற்சாலைகளாக
இங்கேஉருமாறி நிற்கும் போது
17,613 நபர்களுக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கிறார்கள்!
இத்தனை வெற்றிகளையும் தளபதிபெற்றது
அந்த ஏழு நாட்களில்தான்!
அடுத்து,
தமிழனாக!
தமிழ்த் தலைவராக!
தமிழ்நாட்டின் முதல்வராக!
தன்மானச் சுடராக!
சுயமரியாதைக் கொள்கைக்காரனாக!
எல்லாவற்றிற்கும் மேலாக
தலைவர் கலைஞரின் மகனாகநின்று
வரலாற்றுநிகழ்வை நடத்தியிருக்கிறார்
தளபதி அவர்கள்!

“ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்”
உலகப் புகழ்பெற்றது!
உலகத்தில் உள்ள பல்கலைக் கழகத்திற்குத்
தாயானது!
உலகத்தில்தோன்றியமுதல்பல்கலைக்கழகம்!
இந்தப் பல்கலைக்கழகம்
எப்போது எவ்வாறு தோன்றியது
என்று யாருக்கும் தெரியாதாம்!
ஆனால், கற்பிக்கத் தொடங்கியது
1096 ஆம் ஆண்டாம்!
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில்
உரையாற்றுவது என்பதும்,
அங்கே பெரியார் படத்தைத் திறப்பது என்பதும்,
சாதாரண நிகழ்ச்சி அல்ல
என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!
உலகத்தில் தலைசிறந்த
அரசியல் அறிஞர்கள்!
கல்வியில் சிறந்த மேதைகள்!
விஞ்ஞான விற்பன்னர்கள்!
விடுதலை வீரர்கள்!
புதுமைகளைக் கண்டுபிடித்தோர்
போன்றவர்கள் மட்டும்தான்
ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக
மேடையில் இடம் பெறுவார்கள்!

இதோ,
எங்கள் தலைவர் தளபதிக்கு
அந்த மேடை இடம் கொடுத்துவிட்டது!
மேடையில் ஏறியது மட்டும் அல்ல;
பெரியார் படத்தையும் திறந்து வைத்து
தளபதி உரையாற்றி இருக்கிறார்!
இந்தப் புகழ் இந்தியாவில்
ஒருவருக்கு மட்டும்தான் கிடைக்கும்
அந்தப்புகழைப்பெற்று
நாடு திரும்பி இருக்கும் தளபதியே!
எங்கள் முதல்வரே!
எங்களுக்குக் கிடைத்த
இரண்டாம் கலைஞரே!
நீர் நீடூழி வாழ்க!



அமைச்சர் துரைமுருகன்
கழகப் பொதுச் செயலாளர்



தருமபுரி மேற்கு மாவட்டம் கம்பைநல்லூரில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாமினை தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் தொடங்கிவைத்தார். நிகழ்வில் மொரப்பூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினவேல் மற்றும் மாவட்ட மருத்துவ அலுவலர்கள், அரசு அலுவலர்கள், தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.